
மகாஜனன்

# குடும்ப விருந்தாட்டு மலர் - கொழும்பு

2008



With best Compliments From

# Greenlands Hotel Ltd.

*A*

*1st Class Residential*

*North & South Indian*

*Pure Vegetarian Hotel*

*in the*

*City of Colombo*

- **Comfortable Rooms with A/C & Modern Fittings**
- **Party Hall**
- **Catering for any Occasion**
- **Take - away & Liquor Bar**
- **Indian Sweets**

**3A, Shrubbery Gardens**


**Bambalapitiya**

**Colombo 4.**

**Tel : 2581986, 2585592**

**Fax : 2590943**

தந்தையையும் தனயனையும் தலைவணங்குகின்றோம்



தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை

# கொடி வணக்கம்

பல்லவி

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோலமுற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

(கொடி)

அநுபல்லவி

தீரமுற்றுத் திருவடைந்த
தெய்வ துரை யப்பரது
தீர்க்கமான தியானமதில்
தேறிவந்த மாஜனாவின்

(கொடி)

சரணம்

மலர்மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர்விரித்து
தவம்பொலிந்த மாஜனாவைத்
தாங்குகொடியின் தாள்பணிவோம்

(கொடி)

தனமளித்து தவம்மிகுந்து
தாவியாடுங் கொடியிது
மனமகிழ்ந்து மலர்கள் தூவி
வாழியென்று வணங்குவோம்

(கொடி)



புலவர் நா. சிவபாதசுந்தரனார்

# மலராசிரியர் மனதில் இருந்து......

வந்து குவிந்து வளரும் இளையவர்கள்
சிந்தை தெளிந்து திரு மனிதர் ஆம் படிக்காய்
ஆண்டாண்டு காலம் அரைக்கணமும் தாமாது
வேண்டும் பணிகள் எவையும் விரைந்தெடுக்க
நிற்கும் வலிமை......

அதுவே மகாஜனாவின் தனித்தன்மை. ஏறத்தாழ ஒரு நூறாண்டு வரலாற்றின் விளைவாக மகாஜன மைந்தர்கள் ''கட்டி எழுப்பிக் கவனித்துக் காதலெல்லாம் கொட்டிப் புதுக்கிக் கொடுத்த'' தன்மையினால் இப்பூமிப் பந்தெங்கும் உன்னத ஆளுமையுடன் உயர் வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

மகாஜன மைந்தர்களின் விழுமியங்கள் உயர்வானவை. ஆதலினால் அவர்கள் ஒருவரை ஒருவர் உலகின் எந்த மூலையில் சந்தித்துக் கொண்டாலும் தாங்கள் ஒரு குடும்பத்தின் அங்கத்தவர்கள் என்ற உணர்வை இயல்பாகவே பெற்றுவிடுகின்றனர். அந்தக் குடும்ப உணர்வை இன்னும் வலுப்படுத்திக் கொள்வதற்காகக் கொழும்பு மகாஜனன்கள் இவ்வருடமும் ஒரு குடும்ப விருந்தாட்டு நிகழ்வை முழுநாள் வைபவமாகக் கொண்டாடுகின்றனர். நாங்கள் அனைவரும் மீண்டும் ஒரு முறை ஒன்று கூடி எங்கள் பழைய நட்பைப் புதுப்பித்துக் கொள்வதும், புதிய நட்புகளை உருவாக்கிக்கொள்வதும் எங்கள் சமூக ஆரோக்கியத்தை நிச்சயம் உயர்த்தும்.

இவ்வருடம் இவ்விருந்தாட்டின் பிரதம விருந்தினராக எங்கள் முன்னாள் விலங்கியல் ஆசிரியை பேராசிரியர் மனோ சபாரத்தினம் அவர்கள் கலந்து சிறப்பிக்கிறார்கள். விலங்கியல்துறையில் அவரது பரந்த ஆழமான அறிவை 1960களிலேயே பார்த்து வியந்தவர்கள் நாம். காலையில் அவர் காரில் வந்து இறங்கும் காட்சி மனதைவிட்டு மறையாத ஒன்று. அவரது கண்டிப்பும் உன்னதமான கற்பித்தலும் எங்கள் விலங்கியல் பாட விசேட சித்திகளை உறுதிப்படுத்தப் பெரிதும் உதவின. எங்களை விட்டு நீங்கிய பின் அவர் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் விலங்கியல் துறை விரிவுரையாளராக இருந்தார். அக்காலத்திலேயே பூச்சிகளின் உடற் றொழிலியல் தொடர்பான தனது கலாநிதிப்பட்டத்தை எடின்பரோவில் பெற்றுக் கொண்டார். 1981வரை கொழும்புப் பல்கலைக் கழகத்தில் பணிபுரிந்த பின், கிழக்குப் பல்கலைக் கழகம் விலங்கியல் துறைப் பேராசிரியராக அவரை உள்வாங்கிக் கொண்டது. பின்னர் அதே பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானத்துறைப் பீடாதிபதியாகவும் பணியாற்றியுள்ளார். ஏறத்தாழ 28 வருடம் அவரின் கைகளுக்கூடாகப் பல்கலைக்கழகத்தில் பயணித்த மாணவர்கள் பேறு பெற்றவர்கள். ஓய்வு நிலையில் அவர் பணி 'மந்ரு' நிறுவனத்திற்கு ''நிர்வாகப் பணிப்பாளர்'' என்ற வகையில் கிடைத்தக் கொண்டிருக்கிறது. நாடு முழுவதும் பயன்படும் பணியில் தன்னை ஈடுபடுத்தும் நங்கை பற்றி மகாஜனன்களுக்குப் பெருமையே. எங்களுடன் ஒன்று கூட — ஒருநாள்..... வாருங்கள்!

எமது சிறப்பு விருந்தினர் திருமதி சிவராணி கெங்காதரன் அவர்கள் புகழ் பூத்த சட்டத்தரணியாய்த் திகழ்பவர். அவர் ஒரு மகாஜனன் என்ற நினைவே எமக்குப் பூரிப்பைத் தருவது. வாருங்கள் — தாயே! உங்களை உளமார வரவேற்கின்றோம்.

இந்த விருந்தாட்டின் நிகழ்வுகளில் பங்கு கொண்டு இந்த நாளை இனிய நாளாக ஆக்கப் போகின்ற மகாஜனன்கள் அனைவரையும் இரு கரம் கூப்பி வரவேற்கின்றோம்.

''வாயில் பெரிது, மதில்கள் நிலம் பெரிது
கோயில் பெரிது, வகுப்பறைகள் கூடங்கள்
ஆயும் இடம், நூலகம் அரங்கு, மண்டபங்கள்
யாவும் பெரிதே''

என்று எங்கள் மகாஜனன் மகாகவி உருத்திரமூர்த்தி சொன்னார். அது மட்டுமல்ல, மகாஜனன்களின் அறிவு, ஆற்றல், மனப்பாங்கு, விழுமியங்கள், ஆளுமை, யாவும் பெரிதே என்ற நிலையை வலுப்படுத்த இந்த ஒன்று கூடல் ஓர் உந்து சக்தியாக அமைய எங்கள் கல்லூரியில் எழுந்தருளியிருக்கும் ஆனந்த நடராஜன் அருள் பாலிக்கட்டும்.

**கோகிலா மகேந்திரன்**
**மலர்க்குழு சார்பில்**

**25.05.2008**

உ

# ஆசியுரை

தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரியை 1910ஆம் ஆண்டு பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் தாபித்தார். அன்று முதல் இக்கல்லூரி துரிதவளர்ச்சி பெற்றது. இன்று பயன் தரு விருட்சம் போல் ஓங்கி வளர்ந்து நிற்பதைப் பார்க்கும் போது அளவிலா இன்பம் தருகிறது. பாவலர் துரையப்பா பிள்ளையின் புதல்வர் திரு. தெ. து. ஜயரத்தினம் அவர்கள் 1945 ஆம் ஆண்டு இக்கல்லூரியின் அதிபராகக் கடமை ஏற்று இருபத்தைந்து ஆண்டுகள் வழிநடத்தியுள்ளார். இவர் அதிபராக இருந்த காலம் பொற்காலம் எனலாம். 1960 ஆம் ஆண்டு இக்கல்லூரி Super Grade School என்ற அதி உயர் நிலைக்குத் தரம் உயர்ந்தது.

பழைய மாணவர், பெற்றோர், ஆசிரியர்கள் நலன் விரும்பிகள் அனைவரையும் அரவணைத்துக் கல்லூரியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்ட அமரர் அதிபர் தெ.து. ஜயரத்தினம் அவர்கள். என்றும் மகாஜன சமூகத்தின் நிலையான நினைவில் அமர்ந்துள்ளார்.

பொறியியல், மருத்துவம், கலை ஆகிய துறைகளில் நூற்றுக்கணக்கான மாணவர்களைத் தொடர்ந்து பல்கலைக் கழகத்திற்கு அனுப்பிய பெருமைக்குரியது மகாஜனா. இன்று யாழ் பல்கலைக்கழக உபவேந்தராகத் திகழும் நா.சண்முகலிங்கனும் இக்கல்லூரியின் மாணவனே. விளையாட்டுத்துறையிலும் மகாஜனா சாதனைகள் புரிந்துள்ளது.

யுத்த சூழ் நிலையிலும், இடப் பெயர்ச்சியிலும் அவலப்பட்ட காலத்தில் இக்கல்லூரி மாணவர்கள் விலகிச் செல்லாமல், இங்கேயே கற்றலைத் தொடர்ந்திருப்பது, அவர்கள் இக்கல்லூரியின் மேல் கொண்ட பாசத்தை வெளிப்படுத்துகிறது. பெற்றோரும், பழைய மாணவர்களும் எமது கல்லூரி தளர்வடையாமல் நிமிர்ந்து நிற்க வேண்டுமென்ற எண்ணம் உடையவர்கள். அதற்காக உழைத்தும் வருகிறார்கள்.

பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை பல வழிகளில் திட்டமிட்டுச் செயல்படுவதை நாம் அறிவோம். அவர்களின் பணி வெற்றி அளிக்கட்டும் என வாழ்த்துகிறோம்.

இன்னும் இரண்டு ஆண்டுகளில் மகாஜனக் கல்லூரி நூற்றாண்டு விழாக் காணவிருக்கிறது. இவ்விழாவை வெகு விமரிசையாக, தெல்லிப்பழைக் கல்லூரி வளாகத்திலும், கொழும்பிலும் கொண்டாடுவதற்கு எல்லாம் வல்ல சிவகாமி அம்பாள் சமேத சிதம்பர நடராஜப் பெருமான் அருள் புரிவாராக.

எமது தாய் போலும் நம்மை வளர்த்தெடுத்த மகாஜன மாதா, எமக்கு உபதேசிக்கும் தாரக மந்திரம் ‘‘உனை நீ அறி”. இம்மந்திரத்தை உணர்ந்து நாம் மகாஜனாவின் புதல்வர்கள் என்ற உணர்வோடு செயல்படுவோம்.

நாம் மகாஜனன் என்ற முத்திரையைப் பதிக்கும் படியாக கல்லூரியின் வளர்ச்சிக்கு எம்மால் இயன்ற வரை முயற்சிப்போமாக.

*சிவஸ்ரீ சு. து. சுந்தரமூர்த்திக் குருக்கள்*
*மாவிட்டபுரம் – பழைய மாணவனும் ஆசிரியரும்*

சுபம்

# யா/ மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

பழைய மாணவர்கள் ஒரு பாடசாலைக்கு விசுவாசமாக உள்ளபோது அந்தப் பாடசாலையின் வளர்ச்சியை யாராலும் பின்தள்ள முடியாது என்பதற்கு வளர்ச்சியடைந்து சாதனைகள் நிலைநாட்டிக் கொண்டிருக்கும் பல பாடசாலைகள் சாட்சிகளாக அமைந்துள்ளன என்றால் மிகையாகாது.

அந்தவரிசையில் எமது மகாஜனக்கல்லூரியும் பழைய மாணர்களின் அரவணைப்பில் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து உலகம் போற்றும் நிலைக்கு வந்து கொண்டிருப்பதை அனைவரும் உணர்ந்துள்ளோம்.

குறிப்பாக மகாஜனக்கல்லூரிக் கொழும்புப் பழையமாணவர் சங்கம் பாடசாலையின் தேவைகளை உணர்ந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு உலகப் பழையமாணவர் சங்கங்களைத் தூண்டி உதவி செய்வதுடன் தங்களால் உருவாக்கப்பட்ட கல்வி அபிவிருத்தி நிதியத்தினூடாகவும் பாரிய உதவிகளைச் செய்துவருகிறது.

நூற்றாண்டில் மகாஜனக் கல்லூரி அன்னை புதுப்பொலிவுடன் திகழ்வதை தமது இலக்காகக் கொண்டு தொழிற்படும் கொழும்புப் பழையமாணவர் சங்கத்தினருக்குக் கல்லூரியின் சார்பில் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

திருமதி. எஸ். அனந்த சயனன்

**The only person who is educated is the one who has learned how to learn and change**

***-Carl Rogers-***

தெல்லிப்பழை - மகாஜனக் கல்லூரி

பழைய மாணவர் சங்கம் - கொழும்புக் கிளை

**TELLIPPALAI - MAHAJANA COLLEGE**

**Old Students' Association - Colombo Branch**

54, 3/1, St. Lawrence Road, Colombo - 06.
Tel - 0777 - 315570

# MESSAGE FROM THE PRESIDENT

Today, we have come together to mingle in spirits of closeness, commonality and collective indebtedness we owe our Alma Mater. Such feelings in this get together, while blend together, our minds will no doubt chant in chorus the names of the founder of our School Pavalar T. A. Thuraiappapillai, his brother- in law K. Chinnappa, son T. T. Jayaratnam and the teachers associated with them because without whose thoughtfulness, compassion, consideration and love of lives we would not have achieved the educational excellence we have harvested today. I have expressed similar sentiments in our previous get together too. I repeat them as manthra in full consciousness and I feel it is obligatory on all of us, who have been benefitted immensely from the goodness of those great men, to recite the manthra over and over again in gratitude.

We acknowledge the fact that Mahajana has done much to us to take us to greater heights. Shouldn't we then ask ourselves the question, "What have we done to our School in return?" Shouldn't we at least do a bit of our share to the School in reciprocity and relish giving affirmative answers? Let us share these thought provoking questions in this get together, put our acts together and build a stronger Mahajana together.

**S Sirikananathan**

**'வெல்லுக மகாஜன மாதா'**

**PATRONS**

**Principal - Mahajana College**
Mr. S. Dhanabalaa
Mr. T. Lankanesan
Mr. T. P. Murugaiah
Mr. K. S. Nadarajan
Mr. S. Sivapaskaran
Mr. A. Sivanesaselvan

**PRESIDENT**

Mr. S. Sirikananathan
Tel: 2581926, 2448480
E- Mail: sirikananathan@ kpmg.lk

**VICE PRISIDENTS**

Mr.M. Raja Joganantham
Mr. N. Kandeepan
Mr. K. V. Mahathevan
Mrs. Kohila Mahendran
Mr. R. Selvaskandan
Mr. K. Suntharamoorthy

**JOINT SECRETARIES**

Mrs. Malarmathy Gangatharan
Tel: 2484867, 0777320044
E- mail: mmmathy@hotmail. com
Mr. R. Roghithan
E- mail: roghithan@gmail. com
Mobile: 0777315570

**TREASURER**

Mr. S. Jeyavarman
Tel: 2599796, 0777352988
E- mail: jeyavarman@dfccfs. slt. lk

**ASSISTANT TREASURERS**

Mr. S. Anandthakishna
Mrs. Kesini Koneshwaran

**COMMITTEE MEMBERS**

Mr. V Balachandran
Mr. J. Jeyakaanthan
Mr. S.Kathirgamathamby (Editor)
Mr. B. Kirupaharan
Mrs. Pathmini Sathananthan
Mr. S. Sivaharan
Dr. Mythiliy Thavakumaran
Mr. S. P. Thiruarul

**Hony AUDITOR**

Mr. A. Ganeshalingam

# Message From the Chief Guest

# Mahajana As I Knew It In The Sixties

I recall with pride Mahajana of the early sixties when Mr. T. T, Jeyaratnam held the reins of this institution founded by his father, the late Mr. T.T. Thuraiappapillai, a great scholar and a poet with wide interests, and being interested in the development of his home town and perhaps it is this that gave him the urge to set up this institution which today is one of the leading institutions in the country.

Jayaratnam like father had the same ideals, and devoted his entire life for the betterment of the school. He is a dynamic person, he expected all his staff to work with the same sense of devotion and interest. In fact he expected every student to be interested in their studies and what ever activity he or she undertakes with the same interest. To him Mahajana should shine in all activities it participated, he would be happy if our school came out first, but in case we failed to get a position he would say, "it is alright we have played our part, better luck next time," We knew he was not at all happy but he had to say a word of comfort so that we would participate the next time with the same interest.

**Prof. ManoSabaratnam**
**BSc (Ceylon) PhD (Edinborough)**

He was very methodical, disciplined, and he expected everyone associated with the school to develop these qualities whether he be a staff or student. In fact it is this that makes a Mahajanan to shine in whatever position he holds whether it be in this country or outside the country. My stay at this institution was a very brief one, but the training I received made me what I am today, yes I was able to reach great heights in education and functioned as Dean of the Faculty of Science, Eastern University for over 15 years, and earned the name as a good administrator, which I am very proud of.

Jayaratnam was a man of good foresight, this is evident from the manner he selected his staff, whom he knew would do the best to give the students a good quality education, good training in sports, drama, elocution and other extra mural activities. This is evident from the performance of our students in public examinations, and in all extramural activities.

Even to this day one could see our students holding fort and coming out with colours, we expect Mahajana to be the same in the years to come as well.

Mahajana has very strong traditions, religious activities hold an important place in the day to day activities. We would start the day with a Pooja at the school temple and the day with devotional songs, students take it as a pride when he or she is asked to sing the devotional song. Today many of them are country recognized musicians. A student should be moulded when he is young in this background so that they will be able to give country their best. A person with a religious background will always be guided to be honest to himself and this is enough to make him a good citizen.

Today a great many of our students have been denied these opportunities and the result - there is violence, hatred, anger and what not, this has ruined the life of most of our youth, and the mess in the country today is a direct impact of the loss of traditions and values. It is fortunate that Mahajana still continue the traditions which the Founder and subsequently his son has instilled in the minds of all those passing through the portals of Mahajana.

I wish Mahajana a continued excellence in all activities undertaken by the staff and students in the many more years to come.

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் துணைவேந்தரின் வாழ்த்து.

அம்பனைக்கு முன்னால் அடிக்கும் வயல் காற்றில்
கொம்புலுப்பிப் பூக்களினைக் கொட்டும் குடை வாகை
நம் பெரிய வெற்றிக்கு நாலுமலர் சூட்டிடவும்.....


எங்கள் கவிஞன் மஹாகவி அன்று பாடிய கவிதை வரிகள் இன்றைக்கும் அர்த்தம் குறையாமல் நம் பெரிய மகாஜனா காணும் வெற்றிகளுக்குக் கட்டியம் கூறும்.

இடரினும் தளராத எங்கள் ஆத்ம பலத்துக்குச் சாட்சியாய் மகாஜன அன்னையின் அருளாட்சி நிலை பெற்றுள்ளது. எங்கள் ஒவ்வொருவரின் உயர்வுகளுக்கும் நிறைவுகளுக்கும் பின்னால் எங்கள் அன்னை எங்களுக்கு ஊட்டிய அன்பும் அறிவும் ஆதார சுருதியாயுள்ளது.

குடியேற்ற நாட்டாதிக்க காலத்துப் பண்பாட்டுணர்வின் தந்தையாய் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்கள் இட்ட வித்து இன்று விருட்சமாய் உலகப் பரப்பெல்லாம் தன் கிளைகளைப் பரப்பியுள்ளது. உலக மயமாக்க அலைகளிடை அடிபட்டுப் போகாமல் எங்கள் கல்விப் பாரம்பரியத்தை அதன் வேரினைக் காக்கும் பணியில் இணைந்துள்ள மகாஜனன்கள் பெருமைக்குரியவர்கள்.

இந்த வகையில் சிந்தை செயல் யாவும் மகாஜனாவின் மேம்பாடே என அயராது உழைக்கும் கொழும்பில் மையம் கொண்டுள்ள எங்கள் மகாஜனன்களின் வருடாந்த ஒன்றுகூடல் பற்றிய செய்தி மகிழ்ச்சி தருகின்றது. மகாஜன அன்னையின் நூற்றாண்டு விழா பற்றிய செயல் திட்டங்களின் எழுச்சியுடன் அழகான நாளையைக் கட்டியெழுப்பும் உயிர்ப்புடன் கூடும் இந்தச் சங்கமப் பொழுது சிறந்திட எல்லையிலா அன்பு வாழ்த்துக்கள்.

பேராசிரியர் என். சண்முகலிங்கம்
மகாஜனன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
05.05.2008



# Message from Chairman, MahajanaCollege Foundation for Educational Development

It gives me great pleasure to send this message to the "Get together". This occasion contributes to the solidarity of Mahajanans in many ways. It reinforces brotherhood among Mahajanans; it provides an opportunity to share the sweet memories of schooldays and of the achievements of Mahajana in studies, sports and extra curricular activities and rededicate ourselves to build Mahajan to its past pristine glory. Mahajana's achievement in football competitions is a unique record in the 60s' and 70s' and I am proud to hear once again after 21 years Mahajana has become the Jaffna District Football champions.

We are indebted to Mahajana for all the facilities we enjoyed as students and for moulding us as useful citizens.

But the unfortunate students at Mahajana today are devoid of such facilities due to the present circumstances. The College needs our help to afford the same facilities to the students as we enjoyed.

Damaged and half built classrooms, inadequate water supply, electricity, sanitation, furniture, dilapidated laboratory and damaged playground are some constraints to mention.

But the Mahajanans are alive to the situation and have established the Mahajana College Foundation for Educational Development through their collective efforts and contribution to rebuild Mahajana.

On this happy occasion let us rededicate ourselves to rebuild Mahajana by providing financial and professional support and synergy created by the integration of the OSAA past students, parents, teachers and well wishers to regain its former pristine glory.

**Thambiah Lankaneson,**
**Patron OSA, Colombo**

**Formal Education will make you a living.**
**Self Education will make you a fortune**
***-Jim Rohn-***

# மகாஜனக் கல்லூரி
# பழைய மாணவர் சங்கம் –தெல்லிப்பளை

தெய்வ துரையப்பரது தீர்க்கமான தரிசனத்தில் தேறி வந்த மகாஜனாவின் மைந்தர்கள் ஒன்று கூடிக் கல்லூரி வளர்ச்சி பற்றிய செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த ஒன்று கூடல் சிறக்க எமது இதய பூர்வமான வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

மகாஜனா மாதா மகாஜனங்களின் உதவிக்கரங்களால் புதுப்பொலிவுபெற்று கல்வி மற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளில் வளர்ச்சி கண்டு வருகின்றாள். நூற்றாண்டை எட்டவுள்ள எமது அன்னையின் வளர்ச்சிப் பாதையில் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தின் பங்களிப்பும் வழிகாட்டல்களும் காத்திரமான இடத்தை வகிக்கின்றன. தங்கள் சங்கத்தின் கல்லூரி வளர்ச்சிக்கான முயற்சிகள் மேன்மேலும் தொடர எல்லாம் வல்ல சிவகாமி சமேத ஆனந்த நடராஜப் பெருமான் திருவடிகளை வேண்டி நிற்கின்றோம்.

வெல்லுக மகாஜன மாதா

இணைச்செயலாளர்கள்
க. அஜந்தன்,
த. தயானந்தன்

**It is the supreme art of the teacher to awaken joy in creative expression and knowledge**
*- Albert Einstein -*

# விக்ரோறியா மகாஜன மாணவர் அவுஸ்திரேலியா

**Patrons**
Mr. V. Thiagarajah
Mrs.R.Ponnampalam
Mrs.S. Kanesalingam
Mrs.R. Vinayagalingam

**President**
Mrs.Usha Sivanathan

**Vice President**
Mrs.S. T. Sampanthar
Mrs. T. Alagaratnam

**Secretary**
Mrs. C. Naguleswaran

**Assistant Secretary**
Mr. V. Ranjan

**Treasurer**
Mr. T. Sriskantharajah

**Assistant Treasurer**
Mr. K. Rameswaralingam

**Committee Members**
Mr. S. Khathirkanthan
Mr.S. Karunakaran
Mr. R. Rabinthiranathan

**Sports Secretary**
Mr. S. Mahalingam

**International Coordinator**
Mr. S. Vijeyakumar

**Coordinator**
Mr. P. Rajendran

**Auditor**
Mrs. G. Loganathan

விக்டோரிய மகாஜன மாணவர் கிளையின் சார்பாக, தாங்கள் நடாத்தும் வருடாந்த மாநாட்டிற்கு வாழ்த்துத் தெரிவிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

எங்கள் போன்றோருக்கும், எங்களை வளர்த்துவிட்ட மகாஜனக் கல்லூரிக்கும் நீங்கள் ஒரு பாலமாக இருந்து செயல்படுவது வரவேற்கத்தக்கது.

தற்போதைய அதிபர் திருமதி சிவமலர் அனந்தசயனன் அவர்கள் பாடசாலையை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரப் பாடுபடுகிறார் என்பது அவர்கள் செயல்கள் மூலம் தெட்டத் தெளிவாகத் தெரிகிறது. அதற்கு ஆனவற்றை நீங்கள் சேர்ந்து செயல்படுவதில் நாம் பெருமைப்படுகிறோம்.

தொடர்ந்து உங்கள் சேவையும், எங்கள் பங்களிப்பும் நடைபெற எல்லாம் வல்ல சிவகாமி சமேத நடராசப் பெருமானை வேண்டுவோமாக.

உஷா சிவநாதன்.
தலைவர்

**Learning is finding out what you already know**
*Richard bach*

Address: 34 Myrtle street, Glen Waverley, Victoria, 3150 Australia;
Contact Numbers : President - (03) 9808 8374; Secretary - (03) 9511 5425; Treasurer - (03) 9802 8281

# MAHAJANA COLLEGE
# OLD STUDENT'S ASSOCIATION
# CANADA

We are glad to know that your annual get together will be held on 25th of May, 2008.It is with great pleasure that we are sending our greetings for a very successful get together. Your get- together is not only to socialize but to remember the foundation of our life, which was built during our time at Mahajana College. The years at our school were full of pleasant and memorable incidents with our teachers and our classmates. We tend to remember about the past when we all meet at these functions.

When we look back at how the college impacted us, we always get the strong impression that our college education gave us a priceless beginning on the road to success. The knowledge that we received in our college was not just from the core subjects but also from the intangible virtues such as loyalty, honesty, friendship, teamwork and professionalism which is ever present in the atmosphere of our school.

Today, we as Mahajana old students are in a better position than we were before, and we must contribute to our alma mater. With the benefit of our experience in various sectors of the society, we can give our support to ensure that future Mahajanans can get a full experience as we were able to.

There are two important matters that we would like to ask you to consider to honor the alma mater.

- organize and celebrate the centennial celebration throughout the world in a grand scale, and
- Provide financial support to the on going full scale renovation of our college to finish by December 31st, 2009.

We are certain that your social event will reinforce our spirit of unity to bring our college to greater heights.

"Together, we're building the best place for our kids to learn and socialize by making Mahajana College the best place to study."

V. Nantheeswarar
President

With Best

Compliments

From:-

**Mr. M. Machcharajah**

M/ S. Machcharajah & sons,
Kandy Road, Vavuniya

With Best

Compliments

From:-



N. ATPUTHANATHAN

M/ S. Ajani Construction,
128, Amman Kovil Road,
Thonikkal, Vavuniya

# My Life and Times at Mahajana College

After completing the GCE (O/L) Examination with five Credits in a small Government school at Talawakelle, I had no school in close proximity to my residence to pursue further education. While idling at home for almost an year, I decided to repeat the examination with one or two new subjects and once again I obtained five Credits. Mr. Shanmuganathan, Principal, Hindu Senior School, Kandy, a close friend of my brother, observing some special talents in me, urged my brother to seek admission for me in one of the schools in Jaffna. With his assistance we sent applications to the Jaffna college, Vaddukottai, Jaffna Hindu College and Mahajana College for admission. Not surprisingly, all three colleges offered me admission, the first two without hostel accommodation and the last with both and I chose to select the last.

**Prof. M. Sinnathamby**

Going to Jaffna was a new experience to me. My brother and I boarded the Night Mail at Polgahawela and reached Jaffna the following morning. After a bath (first time in a well) and breakfast, we proceeded to the college and secured admission. Thus, my life started at Mahajana College. Everything there was new to me, the teachers, students and the general environment. But since I had been taught by Jaffna teachers throughout, it was not difficult for me to adjust myself to the new environment and very soon I found myself well accepted by everyone there. But having gone from the cool climes of the up country, I found the weather totally hostile. I suffered from all the diseases linked with such weather conditions Measles, Mumps, Diarrhoea etc.

It was July 1959 when I started my studies there and my classmates had already covered some part of the HSC syllabus, as it was known at that time. I had to put in some hard work to catch up with them. The following month was school vacation but I decided to stay back at the hostel and do some work to catch up with what I had missed. I did very intensive work and managed to cover up some of it and when the school re-opened I was somewhat confident to face up to my classmates. My class teachers were extremely kind to me and with their blessings; I was able to do well at the year End Examination. The following year, I had absolutely no difficulties in pursuing my studies and I found that I was far ahead of my classmates. At the HSC/UE Examination I was able to perform well and get selected to the university. In the first batch of 44 students in the Tamil Medium selected to the university on merit I found a place and I was the only one in that from the college that year. However, after about three weeks or so, a further set of about 718 students, known as the External Batch were selected and four of my classmates too found placement.

I had gone to Mahajana College from a small Government school in Talawakelle and I was amazed at the large number of students and teachers and the discipline that was maintained there under its Principal, Late Mr. Duraippah Jeyartnam who was a strict disciplinarian.

Hostel life was fun. I was appointed as Hostel Prefect along with my colleague Rupamoorthy. We had to look after general discipline at the hostel. When something goes wrong, the warden Kandiah Master used to hold long inquiries sometimes lasting from 6.30 to 8.30 p. m. or even later than that. One day I did not go to the classes and was resting at the hostel and on that very day the Principal summoned me and Rupamoorthy to his office and asked why I was not attending classes on that day. We got an opportunity to tell him about the long inquiries and our inability to study in the evenings. Although his immediate reaction was to say that I was giving an excuse to fail the examination but when I responded by saying that I will prove my innocence by passing the examination, he changed his mind and got one of the school Attendants to arrange a class room away from the hostel for our studies. Later, when I passed the examination I did not fail to remind him of this incident and thank him for his goodwill. After I became a lecturer at the university I had the honour of being invited as the Guest of Honour to the college Annual Prize Giving (1966).

I was in the habit of going to my colleague Sivanesachelvan's house to study Tamil from his father Arumugam Master. After the college gate was locked I used to scale over it and go to his house that was located adjoining the college front wall. One day I was caught by the warden in the act of climbing over the gate. He was very angry but when I explained to him that I was only going to study he calmed down. I am sure that he later verified the truth of my statement from Arumugam Master.

Kathirgamathamby, another classmate of mine and I used to go to a small enclosure with a hay stack opposite the college to do some revision work. We used to lean on to the hay stack and study together but one day we saw a rat snake coming out of the hay stack and that was the end of our visit to that place for revision studies.

Golden Jubilee of the college was an event that I can never forget. We enjoyed exhibiting our model of the Iranaimadu Tank much of which was Rupamoorthy's work with minimum input from my side but both of us were at the stall. Visitors raised several questions about the model many of which I could not answer simply because I had never visited that place. But, nevertheless, we thoroughly enjoyed working in the stall.

Whenever I got ready to go home (Badulla) my classmates brought me various fruits and other presents to take home with me. They brought them to the station to be luggaged to Badulla and I got no words to thank them. My final departure from Jaffna was an unforgettable event. Many of my classmates gathered at the station to bid me farewell and it was a sad occasion indeed. My memories of Mahajana will always remain with me. I am thankful to my teachers Messers. Kartigesu, Mahadevan, Nageswaran, Vidwan Sivapathasundaram, Shanmugasundaram and the vice Principal Mr. Krishnapillai who taught us English. His teaching style was unique and is worthy of mention here. The Principal had a good opinion about me, I presume, as he used to refer to me as "our representative from the hill country" On the whole, my days at Mahajana College were quite memorable.


With Best

Compliments

From:-

# S. Sivarajah

Sri arans Civil Contractors,
36 A, Vairavakovil Road,
Vairavapuliyankulam, Vavuniya.


With Best Compliments From:-
BEST WISHES
BEST WISHES WELLWISHERS
BEST WISHES WELLWISHERS
BEST WISHES WELLWISHERS
WELL WISHERS
BEST WISHES WELLWISHERS
BEST WISHES WELLWISHERS

# மகாஜனக் கல்லூரி கல்வி அபிவிருத்தி நிறுவகத்தின் செயற்பாடுகள்.

மகாஜனக் கல்லூரியின் எதிர்காலத்தைச் சிறப்புறச் செய்யும் ஓர் பாரிய நோக்குடன் மகாஜனக் கல்லூரிக் கல்வி அபிவிருத்தி நிறுவகம் 2007ம் வருடம் ஏப்பிரல் மாதம் 8ம் திகதி அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இந்நிறுவகம் ஓர் இயங்குனர் சபையைக் கொண்டு இலங்கைக் கம்பனி சட்டத்திற்கு உட்பட்டதாக உற்ற ஓர் கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டு இயங்கிவருகின்றது.

தெல்லிப்பளை, கொழும்பு, கனடா மற்றும் மெல்போன் ஆகிய மகாஜனக்கல்லூரியின் பழைய மாணவர் கிளைகள் தமது உறுப்பினர்களை இயக்குனர் சபையாக நியமித்துத்தமது முழு ஆதரவையும் அபிவிருத்தி நிறுவனத்திற்கு நல்கி வருகின்றன. உலகெங்கும் மேலும், மற்றைய பழைய மாணவர் கிளைகளும் தமது உறுப்பினர்களை இந்த இயக்குனர் சபைக்கு நியமிப்பது சம்பந்தமாக இப்பொழுது இலங்கையிலும் மற்றும் உலகளாவிய அளவிலும் சிந்தித்து வருகின்றன. உலகளாவிய ரீதியில் வசித்து வரும் பழைய மாணவர்களையும் பழைய, ஆசிரியர்களையும் மற்றும் பொது நலன்விரும்பிகளையும் இணைத்து இதன் நிதித்தேவைகளை வளர்க்கும் வேளையில் மகாஜனக் கல்லூரியின் எதிர்கால வளர்ச்சியில் இந்நிதியம் குறிக்கோள் தவறாமல் தனது தொழிற்பாடுகளை விரிவுபடுத்திக் கல்லூரியின் பல அபிவிருத்தித் தேவைகளை நிவர்த்தி செய்யும் தன்மையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுவரை பல பழையமாணவர்கள் இந்த நிதியத்தில் வாக்குரிமையுள்ள, சிரேஷ்ட, மற்றும் சாதாரண அங்கத்தவர்களாக முறையே ரூபா 50,000/= 25,000/= 10,000/= செலுத்தி இணைந்துள்ளார்கள். இந்த அங்கத்தவர்களின் எண்ணிக்கையை மேலும் வலுப்படுத்த இந்நிதியம் பல பழைய மாணவர்கள் மற்றும் பழைய ஆசிரியர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்திய வண்ணம் இருக்கிறது. மேலும் பல பழைய மாணவர்கள் தனிப்பட்ட முறையிலும், பழைய மாணவர் சங்கங்களுக் கூடாகவும் இந்த நிதியத்திற்குக் கல்வி, விளையாட்டு மற்றும் அபிவிருத்தி சம்பந்தமான துறைகளுக்குப் பல நன்கொடைகளை இதுவரை கொடுத்துள்ளார்கள். அவர்களின் இந்நிதியதிற்கான ஆதரவு மேலும் மேலும் பெருகிக் கொண்டிருப்பதை நாம் உணரக்கூடியதாக இருக்கின்றது. இந்நிதியத்தின் வெளிப்படையான தன்மை, சரியாகக் கணக்குகளைப் பேணும் திறன், வெளிவாரியான சுதந்திரமான கணக்காய்வு என்பவை மிகவும் சார்பாகக் கருதப்படும் தன்மைகளாகும்.

இந்நிதியம் தொலைபேசி, கணனி, இன்டநெட், தொலைநகல் போன்ற நவீன தொடர்பு சாதனங்கள் கொண்ட அலுவலகம் ஒன்றை அமைத்து இயங்கிவருகின்றது.

இந்நிதியம் அதன் இயக்குனர்களின் தொடர்ந்த உழைப்பாலும் மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்களின் ஆதரவாலும் பல உதவிகளைக் கடந்த ஓராண்டில் மகாஜனக் கல்லூரிக்கு வழங்கியது. அதே வேளையில் கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்களின் ஒத்துழைப்பால் பல பாரிய உதவிகளை முன்னெடுக்கக் கூடியதாக அமைந்துள்ளது என்று கூறுவது மிகையாகாது. முக்கியமானவை சில கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

- கணனி ஆசிரியர்களுக்காக மாதம் ரூபா 12,000/= கொடுப்பனவு செய்யப்படுகின்றது.

- 167 சோடி சப்பாத்துக்கள் மற்றும் காலுறைகளை மெல்போன் பழைய மாணவர் சங்கத்தின் உதவியுடன் கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தினூடாக வழங்கியது. இதற்கான செலவு ரூபா 114,756/=. மெல்போன் கிளை ரூபா 92,000/= உதவியாக வழங்கியது.

- எல்லா மாணவர்களும் கழுத்துப்பட்டி (tie) அணிவதற்கான ஓர் முக்கிய முயற்சியாகக் கனடாக் கிளை ரூபா 450,000/= வழங்கியுள்ளது. இந்தப் பணம் நிதியத்தால் நிர்வகிக்கப்பட்டுத் தொடர்ந்தும் தேவைகளுக்கேற்பக் கழுத்துப் பட்டிகளைத் தயாரிப்பதற்கு உதவியாக இருக்க வழிவகுக்கப்பட்டுள்ளது. கல்லூரி இவைகளை விற்று நிதியத்திற்கு வைப்புச் செய்து வருகின்றது.

- கல்லூரியின் உதைபந்தாட்டம் மற்றும் கிரிக்கட் குழுவினருக்குத் தேவையான சீர் உடைகளை அன்பளிப்புச் செய்துள்ளது.

- மகாஜனக் கல்லூரியின் பழைய மாணவரும் இராசயனவியல் ஆசிரியருமான திரு செல்வகுணச்சந்திரன் கல்லூரியின் நீண்ட காலத் தேவையான மினிவேன் ஒன்றை வாங்குவதற்காக நிதியத்தின் ஊடாக 1.6 மில்லியன் ரூபாவை அன்பளிப்புச் செய்துள்ளார்:

  நிதியம் பழைய மாணவரும் பொறியியளாளருமாகிய திரு ராமதாஸ் இன் உதவியுடன் இதைக் கொள்வளவு செய்து அதற்குத் தேவையான திருத்த வேலைகளை மேற்கொண்டுள்ளது.

- கொழும்புப் பழைய மாணவர் சங்கத்தால் நிர்வகிக்கப்பட்ட மாகாஜனவின் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் திட்டங்கள் இப்பொழுது நிதியத்தால் எடுத்து நிர்வாகம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- 2010ம் ஆண்டு தனது நூற்றாண்டைக் கொண்டாட இருக்கும் மகாஜனக் கல்லூரி தன்னைத் தயார்படுத்திக் கொள்வதற்கான ஓர் பாரிய திட்டம் இப்பொழுது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கல்லூரியின் ஒவ்வொரு கட்டிடமும் திருத்த வேலை செய்யப்பட்டு ஓர் புதிய பொலிவுடன் இருப்பதற்காகவும் அதே வேளையில் மாணவர்களுக்காகப் பல வசதிகளைக் கொண்டதாகவும் அமைவதற்கு வழிவகுக்கப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூபா 6.2 மில்லியனுக்கு மேலாகத் தேவையெனக் கணிக்கப்பட்டுள்ளது. எமது பழைய மாணவரும், சட்டத்தரணியுமாகிய திரு. இ. செல்வஸ்கந்தன் தனது முழு ஆதரவையும் வழங்கி இந்தத் திட்டம் நிறைவடைவதற்குத் தேவையான பணம் திரட்டுவதற்கான வழிமுறைகளையும் மற்றும் திட்டத்தை மேலும் விரிவாக்கத் தேவையான ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றார்.

இந்தத் தருணத்தில் எல்லாப் பழைய மாணவர்களும் முன்வந்து இந்நிதியத்திற்குத் தேவையான நிதியை வழங்கி ஆதரவளித்தால் இந்நிதியம் இப்படியான பல நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும். இதனால் மகாஜனக் கல்லூரி எதிர்காலத்தில் ஓர் தலைசிறந்த கல்லூரியாக விளங்க வேண்டிய எல்லாத் துறைகளையும் அபிவிருத்தி அடையச் செய்ய முடியும்.

மேலும் எதிர்காலத்தில் இந்நிதியத்தின் இயக்குனர் சபை ஓர் தெளிவான நோக்குடன் செயற்பட வேண்டும் என்பதை இந்நிதியத்தின் அங்கத்தவர்கள் தம் மனதில் கொண்டு அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இந் நிதியத்தின் இயக்குனர்களாகத் திருவாளர்கள் த. லங்காதேசன் (தலைவர்). த. பூ. முருகையா, சி.சிவபாஸ்கரன் சி. தனபாலா, ச.சிறிகணநாதன் சி.ஜெயவர்மன், இ. செல்வஸ்கந்தன் பூ.சி. கணேசலிங்கம் வே. நந்தீஸ்வரர், திருமதி சி. அனந்தசயனன் ஆகியோர் இருந்து வருகின்றனர்.

சி. ஜெயவர்மன்
இயக்குநர் சபை சார்பில்.

With Best

Compliments

From:-

# J.J. Civil Construction,

**No: 117/1, Good Shed Road,**

**Vavuniya**

*With Best Compliments From:-*

LEELA

# LEELA EXPORTS & IMPORTS

## Manufactures Exporters & Importers

SLSI ISO 9001

ISO 9001: 2000 Quality System Certified Organization

MGMT. SYS. RvA C 155

42, Bandaranayake Mawatha, Colombo - 12, Sri Lanka.
**Telephone : 2423399, 2440128 Fax : 94 11 2423414**
**E - mail : leelaexp@sltnet.lk**
**GOLD AWARD WINNER.**
**National Chamber of Exporters Award 2000**

# தெல்லிப்பழை - மகாஜனக் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் – கொழும்புக் கிளை

# TELLIPPALAI - MAHAJANA COLLEGE

**Old Students' Association - Colombo Branch**

54, 3/1, St. Lawrence Road, Colombo - 06. Tel - 0777 - 315570

| | |
|---|---|
| **PATRONS** | **Principal - Mahajana College**<br>Mr. S. Dhanabalaa<br>Mr. T. Lankanesan<br>Mr. T. P. Murugaiah<br>Mr. K. S. Nadarajan<br>Mr. S. Sivapaskaran<br>Mr. A. Sivanesaselvan |
| **PRESIDENT** | Mr. S. Sirikananathan<br>Tel: 2581926, 2448480<br>E- Mail: Sirikananathan@ kpmg.lk |
| **VICE PRESIDENTS** | Mr.M. Raja Joganantham<br>Mr. N. Kandeepan<br>Mr. K. V. Mahathevan<br>Mrs. Kohila Mahendran<br>Mr. R. Selvaskandan<br>Mr. K. Suntharamoorthy |
| **JOINT SECRETARIES** | Mrs. Malarmathy Gangatharan<br>Tel: 2484867, 0777320044<br>E- mail: mmmathy@hotmail. com<br>Mr. R. Roghithan<br>E- mail: roghithan@gmail. com<br>Mobile: 0777315570 |
| **TREASURER** | Mr. S. Jeyavarman<br>Tel: 2599796, 0777352988<br>E- mail: jeyavarman@dfccfs. slt. lk |
| **ASSISTANT TREASURERS** | Mr. S. Anandthakishna<br>Mrs. Kesini Koneshwaran |
| **COMMITTEE MEMBERS** | Mr. V Balachandran<br>Mr. J. Jeyakaanthan<br>Mr. S.Kathirgamathamby (Editor)<br>Mr. B. Kirupaharan<br>Mrs. Pathmini Sathananthan<br>Mr. S. Sivaharan<br>Dr. Mythily Thavakumaran<br>Mr. S. P. Thiruarul |
| **Hony AUDITOR** | Mr. A. Ganeshalingam |

**With Best Compliments From:-**

# JANA COMPUTER TECH

**J.T. Complex, #385 - 1 /1A, Galle Road, Colombo - 06 T. P : 2360494**

**Authorized Foreign Associates, UK** | **NICT COMPUTER EDUCATION** | **Business Associates, India**

## Computer Classes & Training

| Programming | Web Designing | Accounting |
|---|---|---|
| Oracle<br>Visual Basic<br>Visual Basic Net<br>Java<br>**Each 4500/=** | Dream weaver MX<br>Flash MX<br>Fireworks MX<br>Java Scripts<br>HTML<br>**3Months 4500/=** | Tally 6.3<br>Accpac<br>Quick Book pro<br>Ms Excel XP<br>**3Months 14 500/=** |
| **Hardware/ Networking**<br>Hardware Technology 10 000/=<br>Linux Administration 12 000/=<br>Networking 14 000/= | **Graphic Packages**<br>Flash MX<br>3D Studio Max<br>Maya<br>Adobe Premiere<br>**6 Months 18 750/=** | **Panel of Lecturers**<br>M. Janarthanan (B.B.M)<br>M. Janahan (Dip. in Ele.)<br>M. Janakkumaran<br>M.Janandanan<br>S. Suthakaran (B.C.A)<br>Y. Saranga NCC (UK)<br>S. Balasankar (B.Sc.)<br>S. Arjune<br>P. Arun (M.Sc.) |

**Other Courses :**
**IAB, AAT, CIMA, London O/L, A/L, IELTS**

**BIT Class**
Semester 1, 2,3, 4,
**Each 15 000/=**

**With Best Compliments From:-**

# Access Engineering Pvt Ltd

**278, Union Place**
**Colombo - 02**

# எமது கல்லூரி க. பொ. த. உயர்தர மாணவர்களுக்கான புலமைப் பரிசில்களும், கல்வி கற்பதற்கான மானியங்களும், வழங்கல் திட்டம்.

(கல்வி அபிவிருத்திக்குழு - ப. மா. சங்கம் கொழும்புக் கிளை)

இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் கல்விப் பொதுத்தாரதர சாதாரண பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில், எமது கல்லூரியில் கல்விப் பொதுத்தாரதர உயர்வகுப்புக்களில் கல்வி பயிலும் மாணவர்களுக்குப் புலமைப் பரிசில்கள் வழங்கும் திட்டம் ஒன்றினைக் கல்லூரியின் பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளை ஏனைய எமது கல்லூரிப் பழைய மாணவர் சங்கக் கிளைகளுடன் இணைந்து ஏற்படுத்தி உள்ளது. புலமைப் பரிசில்கள் பெறாது கல்வியிலும் விளையாட்டுத்துறை, கலைகலாச்சாரத்துறை, சாரணீயம் போன்ற புற நிகழ்ச்சிகளிலும் போதிய அக்கறை காட்டி வரும், மிகமிகப் பணத் தேவையுள்ள மாணவர்களுக்குக் கல்வி கற்பதற்கான மானியம் வழங்கும் திட்டம் ஒன்றினையும் ஏற்படுத்தச் சகல நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் புலமைப் பரிசில்களோ அல்லது கல்வி கற்பதற்கான மானியங்களோ பெறும் மாணவர்கள் ஒவ்வொருவரும் பாடசாலை விதிகளுக்கு அமைவாக நடப்பவர்களாகவும், சிறந்த நடத்தையுடையவர்களாகவும், உயர்தர வகுப்பில் கல்விபயிலும் காலப்பகுதியில் கல்வியில் திருப்திகரமான முன்னேற்றத்தையுடையவர் களாகவும், இருத்தல் வேண்டும். இவை கல்லூரி அதிபரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

பரீட்சைத் திணைக்களத்தால் நடாத்தப்படும் க.பொ.த. சாதாரண பரீட்சையில் ஐந்து அல்லது ஐந்திற்கு மேற்பட்ட அதிவிசேட சித்திகளைப் பெற்று, எட்டுப் பாடங்களில் பெறப்படும் மொத்தப் புள்ளிகளின் வரிசைக் கிரமப்படி, முதல் பதினைந்து - எமது கல்லூரியில் கல்வி கற்கும் - மாணவர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கப்படும். வேறு பாடசாலை மாணவர்களாயின், எட்டு அல்லது எட்டிற்கு மேற்பட்ட அதிவிசேட சித்திகளைப் பெற்று, எமது கல்லூரியில் க.பொ.த. உயர்தர வகுப்பில் கல்வி கற்பதற்கு அனுமதி பெற்றவிடத்து, அதிபரின் உறுதியுரையின் அடிப்படையில் புலமைப் பரிசில் வழங்கப்படலாம்.

முதல் தடவையாக மே 2005 - ஏப்ரல் 2007 இற்கான காலப்பகுதியில் பதினைந்து மாணவருக்கு, இப்புலமைப் பரிசில்கள் வழங்கப்பட்டன. பத்து அதிவிசேட சித்திகள் பெற்ற பிள்ளை ஒன்று மாதாந்தம் ரூபா இரண்டாயிரம் வீதமும், ஏனைய பதினான்கு பிள்ளைகளும் மாதாந்தம் ரூபா ஆயிரத்து ஐந்நூறு வீதமும், இருபத்து நான்கு மாதங்களுக்கு இப்புலமைப் பரிசில்கள் பெற்றனர்.

இரண்டாவது தடவையாக மே 2006 - ஏப்ரல் 2008 இற்கான காலப்பகுதியில் பதினைந்து மாணவர்கள் மாதாந்தம் ரூபா ஆயிரத்து ஐந்நூறு வீதம் புலமைப் பரிசில்களைப் பெற்று வருகின்றனர். மூன்றாவது தடவையாக மே 2007 - ஏப்ரல் 2009 இற்கான காலப்பகுதியில் பத்து அதிவிசேட சித்திகள் பெற்ற ஒரு மாணவர் மாதாந்தம் ரூபா இரண்டாயிரமும், ஏனைய பதினைந்து மாணவர்கள் மாதாந்தம் ரூபா ஆயிரத்து ஐந்நூறு வீதமும் பெற்று வருகின்றனர். இவர்களில் ஒருவர் வேறு பாடசாலையில் இருந்து எட்டு அதிவிசேட சித்திகள் பெற்று, எமது கல்லூரியில் க.பொ.த உயர்தர வகுப்பில் அனுமதி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலமைப் பரிசில் நிதிக்கு ரூபா மூன்று இலட்சம் வழங்கப்படும் இடத்து, இப்பணம் ஒரு பாதுகாப்பான வங்கியில் கல்லூரியின் கல்வி அபிவிருத்திக்கான நிறுவனத்தினால் நிலையான வைப்பில் இடப்பட்டு வருடாவருடம் இதிலிருந்து பெறப்படும் வட்டி வீதத்தில் எட்டு வீத அல்லது ஆறு வீத வட்டியை ஒரு மாணவருக்கு புலமைப் பரிசில் வழங்குவதற்குப் பயன்படுத்தி, மிகுதி முதலுடன் நிலையான வைப்பில் சேர்க்கப்படும்.

எனவே இம்மூன்று இலட்சம் ரூபா ஒரு மாணவருக்குப் புலமைப் பரிசில் வழங்குவதற்கு உதவுதலோடு, வருடாவருடம் அதிகரித்தும் செல்லும். முடிவிலி வருடங்களுக்கு இது தொடர்ந்து செல்லும். காலப்போக்கில் மாணவர்களுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் தொகையை அதிகரித்துக் கொடுப்பதற்கு ஏதுவாகும். தற்போது ஒன்பது பழைய மாணவர்கள், தனித்தோ அல்லது அவர்களின் சகோதரர்களுடன் சேர்ந்தோ ரூபா மூன்று இலட்சம் வீதம் உதவியுள்ளனர். ஒவ்வொரு வருட முடிவிலும், இவர்களுடைய பணமீதியையும், எந்த மாணவர்கள் இவர்களுடைய நிதியிலிருந்து புலமைப் பரிசில் பெறுகின்றார்கள் என்பதையும் எமது நிறுவனம் அவர்களுக்கு அனுப்பி வைக்கும்.

இருபது பழைய மாணவர்கள் ஒரு காலப் பகுதிக்கு வேண்டிய ரூபா முப்பத்தாறாயிரத்தையும் (ரூபா36000) ஒரே தடவையிலோ அல்லது ரூபா 18000 வீதம் இரு தடவைகளிலோ தந்து உதவுகின்றனர். மே 2005 - ஏப்ரல் 2007 காலப்பகுதிக்கு ரூபா 36000 தந்து உதவிய ஒரு பழைய மாணவர் தற்பொழுது ரூபா மூன்று இலட்சத்தைச் செலுத்தி ஒன்பது பேரில் ஒருவராகியுள்ளார். ஏனையோரும் இதனைப் பின்பற்றினால் நிருவாக வேலை மிகவும் இலகுபடுத்தப்பட்டு விடும். கனடா ப.மா. சங்கம் பத்துப் பேருக்குரிய புலமைப் பரிசில்களுக்காக வருடா வருடம் ரூபா 180,000 உம், அவுஸ்ரேலியா விக்ரோறியா ப.மா. சங்கம் ஐந்து பேரின் புலமைப் பரிசில்களுக்காக வருடாவருடம் ரூபா 90,000 உம் இங்கிலாந்தில் பழைய மாணவர்கள் மூவர்கள் வருடாவருடம் ரூபா 18,000 வீதமும் கொழும்பில் இருவர் ரூபா 18,000 வீதமும் வழங்கி வருகின்றனர். அமெரிக்காவில் இருந்து ஒருவர் மாதாதம் ரூபா 1500 எமக்குக் கிடைக்கும்படி ஒழுங்கு செய்துள்ளார்.

2010இற்கு முன்னதாக க.பொ.த உயர்தர வகுப்பில் மொத்தமாக ஐம்பது மாணவர்கள் புலமைப் பரிசில்களும், கல்வி கற்பதற்கான மானியமும் பெறத்தக்க இலக்கோடு நாம் வேலை செய்து கொண்டிருக்கிறோம். பழைய மாணவர்கள் சகலரினதும் அக்கறையோடு கூடிய செயற்பாடுகள் மென்மேலும் இத்திட்டம் சிறப்பாக இயங்கிக் கல்லூரிக்குப் பல நன்மைகளை அளிக்க உதவும் என்பது எமது நம்பிக்கை.

இத்திட்டத்தால் இன்று நாம் அவதானிக்கக் கூடிய நன்மைகள் சில:

